**அசல் வழக்கு எண். 248/2012**

வா.சா.1 - நாச்சிமுத்து என்கிற மணி

த/பெ.பழனிச்சாமி

**நாள் : 06.08.2025**

**சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணை செய்யப்படுகிறார்.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் மொஞ்சனூர் கிராமம் பூண்டிபாளையத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு முதலில் யார் தாக்கல் செய்தார் என்றால் எனது மருமகன் கே.பழனிச்சாமி பொது அதிகார முகவராக இருந்து வழக்கு தாக்கல் செய்தார். என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் வண்டிப்பாதை தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குரையில் எதற்காக பொது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. என் அப்பாவும், என் மனைவியும் பழனிச்சாமிக்கு பவர் கொடுத்துள்ளார். மேற்படி நான் சொல்லும் விவரத்தை வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சொத்துக்கள் எவ்வளவு விஸ்தீரணம் என்ன சர்வே எண் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பெரியசாமி அய்யரிடமிருந்து ஏக்.2.84 செண்டும், 1966 ல் பழனிச்சாமி என்பவரிடமிருந்து ஏக்.2.84 செண்டும் கிரையம் வாங்கப்பட்டது. தாவா ஏ அட்டவணை சொத்துக்கள் எனது அப்பா கிரையம் வாங்கிய வகையில் என் அப்பாவான 1 ம் வாதிக்கு பாத்தியம் என்றால் சரிதான்.

2. தாவா சொத்து உள்ள சர்வே எண்ணில் எங்களுக்கு பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அனந்தகிருஷ்ணன், தணிகாச்சலம், பிரேமா ஆகியோர்களுக்கு பூர்வீக சொத்துக்கள் மொஞ்சனூர் கிராம சர்வே எண்கள்.33, 34 மற்றும் 27 களில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வைரமடையிலிருந்து முத்தூர் போகும் தென்வடல் தார்ரோட்டிற்கு கீழ்புறமாகதான் தாவா சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.25/1 என்பது எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் உட்பிரிவு எனக்கு சரியாக தெரியவில்லை. சர்வே எண்.25 ல் 2 பாகமாக சொத்து வாங்கப்பட்டது.

3. தணிகாச்சலம் நிலத்திற்கு தென்புறமாக என்னுடைய சர்வே எண்.25/1 பி நிலம் இருக்கிறதா என்றால் அங்கு தடம் உள்ளது. அதற்கு தென்புறமாகத்தான் எங்களுடைய நிலம் உள்ளது. எனது தந்தை பெரியசாமி அய்யரிடமிருந்து கிரையம் வாங்கியதாக சொல்லும் நிலத்திற்கு தென்புறமாக பழனிச்சாமி அய்யரிடமிருந்து கிரையம் வாங்கியதாக சொல்லும் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 கிரைய பத்திரத்தில் பழனிச்சாமி அய்யரிடமிருந்து மற்றும் பெரியசாமி அய்யரிடமிருந்து கிரையம் வாங்கியபோது நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டு தான் கிரையம் பெறப்பட்டது என்றால் பத்திரத்தில் உள்ள படி தான் கிரையம் பெறப்பட்டது.

4. பழனிச்சாமி அய்யரிடமிருந்து கிரையம் பெற்ற நிலத்திற்கு தென்புறமாக ரங்கசாமி நிலம் உள்ளது என்றால் சரிதான். ரங்கசாமி நிலத்திற்கு தென்புறமாக கோவிலுக்கு சொந்தமான சர்வே எண்.23 ல் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவில் நிலத்திற்கு தென்புறம் வைரமடை-முத்தூர் தென்வடல் ரோட்டிலிருந்து கிழமேலாக பஞ்சாயத்து ரோடு உள்ளது என்றால் ரோடுதான் உள்ளது. அந்த ரோட்டிலிருந்து சர்வே எண்.23 மேற்கு கோட்டில் வண்டிப்பாதை உள்ளதா என்றால் வண்டிப்பாதை என்று இல்லை. அங்கு நிலம் இருப்பவர்கள் நிலத்தை உழுவதற்கு அதை பயன்படுத்துவார்கள். மேற்கு ஓரமாக உள்ள பாதை வழியாக வண்டி வாகனங்கள் செல்லும் என்றால் சரியல்ல. வண்டி வாகனங்கள் எதுவும் செல்லாது. பழனிச்சாமி அய்யரிடமிருந்து கிரையம் வாங்கிய நிலத்தில் தான் வீடு கட்டி குடிடயிருந்து வருகிறோம் என்றால் சரிதான்.

5. மேற்படி கிழமேல் பஞ்சாயத்து ரோட்டிலிருந்து சர்வே எண்.23ன் மேற்கு ஓரமாகவும், ரங்கசாமி நிலத்திற்கு மேற்கு ஓரமாகவும், எனது வீட்டிற்கும், நிலத்திற்கும் சென்று வருகிறோம் என்றால் பாதையும் இல்லை. நாங்கள் அவ்வாறு செல்வதும் இல்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு தாவா சொத்துக்களை சர்வேயர் வைத்து அளக்கப்பட்டதா என்றால் ஆமாம். சர்வேயர் உதவியுடன் அளக்கும்போது என்னென்ன சர்வே எண்கள் அந்த பாதையில் செல்கிறது என்று சர்வேயர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் எங்கள் வீட்டிலிருந்து தெற்கு புறமாக எந்த பாதையும் இல்லை. என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.5 ஆவணத்தில் வைரமடை-முத்தூர் செல்லும் தென்வடல்

தார்சாலையிலிருந்து சர்வே எண்.137 கிழமேல் பஞ்சாயத்து மண்சாலை வழியாக வடக்கு நோக்கி சர்வே எண்.23 ன் மேற்கு ஓரம் மற்றும் சர்வே எண்.25/2 ன் மேற்கு ஓரமாக சர்வே எண்.25/1 சில் உள்ள எங்கள் வீட்டிற்கு செல்லும் தடத்தை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு பாதை எதுவும் இல்லை.

6. பழனிச்சாமி அய்யரிடமிருந்து கிரையம் வாங்கிய நிலத்திற்கு தென்மேற்கு மூலையில் சர்வே எண்.37 லான கோவில் நிலம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு மேல்புறமாக சர்வே எண்.36 உள்ளதா என்றால் சர்வே எண் தெரியாது. ரங்கசாமி, சாமியப்பன், பழனிச்சாமி வகையறா நிலம் உள்ளதா என்றால் வைரமடை-முத்தூர் தென்வடல் ரோட்டு ஓரமாக நிலம் உள்ளது. மேற்படி ரோட்டிலிருந்து மேற்படி நிலத்தின் வழியாக ஒரு இட்டேரி பாதை உள்ளதா என்றால் இல்லை. மாடு பிடித்து செல்லும் அளவுக்கு மட்டுமே உள்ளது. அது கோவில் நிலத்தின் வழியாக கிழக்கு நோக்கி வந்து ரங்கசாமி நிலம் வரை வருகிறதா என்றால் சர்வே எண்.37 லிருந்து சர்வே எண்.23 உடன் முடிவடைகிறது. சர்வே எண்.23 ல் உள்ள பாதையும், ரங்கசாமி நிலத்தில் மேற்கு ஓரமாக உள்ள பாதையும் சர்வே எண்.37 க்கு கிழக்கு ஓரமாக ஒன்றாக இணைகிறதா என்றால் அவ்வாறு எந்த பாதையும் இல்லை.

7. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை நேரில் வந்து பார்வையிட்ட போது நான் சொல்லிதான் குறித்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அந்த பாதை உள்ள அமைப்பை ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபோல எதுவும் இல்லை. எங்கள் நிலத்திற்கு கீழ்புறமாக பிரதிவாதிகள் நிலம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் நிலத்திற்கு மேல்புறமாக யார் நிலம் உள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. எனது பண்ணையில் வேலை செய்தவர் பெயரில் இருப்பதாக சொன்னார்கள். பெரியசாமி அய்யரிடமிருந்து கிரையம் வாங்கிய வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் மீனாட்சி அம்மாள் பூமிகளுக்கு தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு, பழனிச்சாமி அய்யர் பூமிக்கு வடக்கு இதன் மத்தியில் ஏக்.2.84 2/3 என்று குறிப்பிட்டுதான் கிரையம் பெறப்பட்டது என்றால் தடம் இருப்பதாகவும்தான் எழுதப்பட்டது.

8. நான் தாவா வழக்குரை பி அட்டவணையிலும், வா.சா.ஆ.6 தோராய வரைபடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள பி அட்டவணை பாதை அமைப்பு வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 கிரைய பத்திரங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால்

சரியல்ல. நான் தோராய வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தாவா பி அட்டவணை பாதை அமைப்பு இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 கிரைய பத்திரங்களில் எத்தனை லிங்ஸ் பாதை என்றும், அது எங்கிருந்து தொடங்கி எங்கு முடிகிறது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 தோராய வரைபடம் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 கிரைய ஆவணங்களுக்கு எதிராக அதில் சொல்லாத சங்கதிகளை தவறாக, கற்பனையாக சித்தரித்து வரையப்பட்டது என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ.1, 1959 தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது முன்னோர்களோ தரப்பினர்கள் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1, 1959 தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது முன்னோர்களோ தரப்பினர்கள் கிடையாது என்றாலும், பிரதிவாதிகளை அந்த ஆவணம் கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.4 தான செட்டில்மெண்ட் பத்திரம் என் அப்பா என் பெயரில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் எந்த சர்வே எண்ணில் உள்ள வழித்தடம் வழியாக குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனது தகப்பனார் கிரையம் வாங்கிய வா.சா.ஆ,2 மற்றும் 3 ஆவணங்களில் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் எங்களது வசதிக்காக எனது தகப்பனாரால் இல்லாத பாத்தியத்தை குறிப்பிட்டு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்திற்கும், தாவா பி அட்டவணை சொத்துக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

10. மேற்படி வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி வா.சா.ஆ.5 ஆவணம் எனது மனைவி 2 ம் வாதி பெயரில் தவறான சொத்து விவரம் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்து விவரம் தாவாவில் குறிப்பிட்டுள்ளவாறு வா.சா.ஆ.4, 5 ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அனந்தகிருஷ்ணன் கருரில் தான் உள்ளார் என்றால் சரிதான். வெளியில் குடியிருக்கிறார். வாரவாரம் வருவார். தணிகாச்சலம் பெங்களூரில் உள்ளார் என்றால் சரிதான். அவர் 2, 3 மாதங்களுக்கு ஒரு முறை வருவார். 3ம் பிரதிவாதியான பிரேமா கோபிசெட்டிபாளையத்தில் குடியிருந்து கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 3 மாதத்திற்கு ஒரு முறை வருவார். தாவா தடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக என் மீது தென்னிலை

காவல் நிலையத்தில் புகார்மனு கொடுத்தார்களா என்றால் ஆமாம். அந்த விசாரணையில் நான் பிரதிவாதிகளின் இடத்தை பாதையாக பயன்படுத்த மாட்டேன் என்று எழுதி கொடுத்தேன் என்றால் தவறு. அவ்வாறு நான் எதுவும் எழுதிகொடுக்கவில்லை.

11. தாவா பி அட்டவணையானது 2ம் பிரதிவாதி தணிகாச்சலத்திற்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றாலும், நான் விசாரணையில் 2ம் பிரதிவாதி தணிகாச்சலத்திற்கு பாத்தியப்பட்ட நிலத்தில் நான் நுழைய மாட்டேன் என்று போலீஸ் விசாரணையில் எழுதி கொடுத்துள்ளேன் என்றாலும், அதன் அடிப்படையில் மேற்படி புகாரானது முடித்து வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-நாச்சிமுத்து என்கிற மணி

**Taken down by me/before me in Open court and read over / and Interpreted to the deponent and admitted by him/her to the correct**

Sd/-Ba.Dhaarani

**Additional District Munsif,**
**Karur.**